செய்தி வெளியீடு எண். 04-2016 நாள்: 01.12.2016

# விழுப்புரம் மாவட்டம் 2016- வடகிழக்கு பருவமழை 'நடா' புயலை எதிர்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

******

விழுப்புரம் மாவட்டம் 2016- வடகிழக்கு பருவமழை 'நடா' புயலை எதிர்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில், இன்று (01.12.2016) அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.

2016 வடகிழக்கு பருவமழை மற்றும் 'நடா' புயலை எதிர்கொள்ள, பேரிடர் மேலாண்மை துறை சார்ந்த அனைத்து முக்கிய அலுவலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் அவசரகாலங்களில் தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு, தொடர்புடைய தொலைபேசி எண்கள் சேகரிக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

வானூர் வட்டத்தில் துணை ஆட்சியர் நிலையிலும், மரக்காணம் வட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 2 பேரூராட்சிகளில் 12 பகுதிகள் தாழ்வான பகுதிகள் என கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி தாழ்வானப் பகுதிகளில் வெள்ள நேரத்தில் பாதிப்புக்குள்ளாகும் பொதுமக்களை 11 புயல் பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கவும், அவர்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் உணவு வழங்க சமையலர்கள் மற்றும் இதர பொருட்களை தருவிக்க வேண்டிய முன்னேற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளது.

மின் தட்டுப்பாடு ஏற்படும் நேரத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் தடையின்றி அளிக்க 29 ஜெனரேட்டர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழையினால் அதிக மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்ற 25 ஜே.சி.பி. இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளது. மேலும், ஜே.சி.பி. இயந்திர உரிமையாளர்கள் கண்டறியப்பட்டு, அவர்களின் கைப்பேசி எண்கள் சேகரிக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு தயார் நிலையில் உள்ளனர். ஜெனரேட்டர் மற்றும் ஜே.சி.பி. இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான எரிபொருட்களை சேமித்து வைக்க அறிவுரைகள் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து பேரூராட்சிகளுக்கும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் 1 சொந்தமாக கொடுக்கப்பட்டு, மேலும் அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள் 24 மணிநேரமும்

தலைமையிடத்தில் தங்கியிருந்து, கண்காணிக்கவும், பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களைக் கொண்டு வெள்ளத் தடுப்பு பணிகளை மேற்கொள்ள, தயார் நிலையில் உள்ளனர்.

இதர வட்டங்களில் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் நிலையிலும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள விழுப்புரம், திண்டிவனம், கள்ளக்குறிச்சி ஆகிய 3 நகராட்சிகளிலும் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறையின் மூலம் தார் சாலைகள், சிறு பாலங்கள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்காவண்ணம் சரிசெய்யப்பட்டுள்ளது.

630 நீச்சல் பயிற்சிபெற்ற நீச்சல் வீரர்களும், 530 தன்னார்வளர்களும் நடா புயலின் போது ஏற்படும் தாக்கங்களை எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் உள்ளனர் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும் நடா புயலினால் மாவட்டத்தில் எந்தவித தாக்கமும் ஏற்படா வண்ணம் அனைத்துத்துறை அலுவலர்களும் துரிதமாக செயல்பட வேண்டும் என்று மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.நரேந்திரன்நாயர்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.சரயு,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அனுசுயாதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.மணி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜீனத்பானு (விழுப்புரம்), உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ராமதாஸ் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.